## தலைப்பு 261 – காலி மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

### 1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | காலி கடவத்சதர | (ஏ) | நாகொடை | (கி) | யக்கலமுல்ல |
| (ஆ) | தவலம | (ஐ) | பலப்பிட்டிய | (கீ) | போப்பே போத்தல |
| (இ) | நியாகம | (ஒ) | ஹிக்கடுவ | (கு) | வெலிவிட்டிய- திவிதுர |
| (ஈ) | அம்பலாங்கொடை | (ஓ) | அக்மீமன | (கூ) | இமதூவ |
| (உ) | கரந்தெனிய | (ஔ) | பெந்தோட்டை | (கெ) | கோனபீனுவல |
| (ஊ) | எல்பிட்டிய | (க) | ஹபராதுவ | | |
| (எ) | நெலுவ | (கா) | பத்தேகம | | |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

காலி மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 21 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 936 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 930 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 6 மில்லியன் அதாவது 0.64 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 890 | 884 | 6 | 0.64 |
| மூலதன | 46 | 46 | 0 | - |
| மொத்தம் | **936** | **930** | **6** | 0.64 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 26 அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களால் ரூபா 5,954 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,926 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேமிப்பு ரூபா 1,028 மில்லியன் ஆக இருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26101 | 52 | 52 | 47 | 48 | 235 | 202 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0308/0013/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 194,086 ஆகக் காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6003/0000/00/0037/0000/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கு மீதி ரூபா 445 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், காலி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 261 – காலி மாவட்டச் செயலகம்

---

### 3.1 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்

---

பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதி அபிவிருத்தி செயற்திட்டம்**

---

2011 மே 20 ஆந் திகதிய MED/RD/PR/01 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் (கிராம அபிவிருத்தி) கடிதத்தின் படி காலி மாவட்டத்தில் 310 கிலோமீற்றர் நீளமான 102 வீதிகளை காபட் இடுவதற்காக 2011 மே 11 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் கீழ் வீதி அபிவிருத்தி செய்யும் பொறுப்பு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் நிர்மாணச் செயற்பாடுகளின் மேற்பார்வை தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கையளிக்கப்பட்டிருந்தது. 2011 யூன் 20 ஆந் திகதி காலி மாவட்டச் செயலாளர் மற்றும் அரச பொறியல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரினால் 310 கிலோமீற்றருக்கு காபட் இடுவதற்காக ரூபா 3,100,000,000 பெறுமதியில் 6 மாதங்களில் வேலையைப் பூர்த்தி செய்வதன் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையில் செயல்முன்னேற்ற அறிக்கையின் படி 297.78 கிலோமீற்றர் அளவான வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 694,400,000 கூட்டுத்தொகையும் (பெறுமதி சேர் வரியுடன்), 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 117,028,786 தொகையுமாக ரூபா 811,428,786 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையில் அந்த முற்பணங்களிலிருந்து ரூபா 485,280,069

தொகை அதாவது வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து 60 சதவீதத்திற்கு அண்மித்த அளவில் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஆ) சரண சந்தி, அளுத்வல சந்தி, கிரிந்தி எல மிட்டியாகொட கலகொட சந்தி வரையான வீதியில் 10.5 கிலோமீற்றர் காபட் இடல்**

---

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 195,869,435 தொகையின் அடிப்படையில் ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2011 யூன் 20 ஆந் திகதி வரையில் ரூபா 17,248,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு மாவட்டச் செயலாளருக்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் வீதியின் ஆரம்பத்தில் 2.8 கிலோமீற்றர் பகுதி ABC இட்டு அல்லது காபட் இடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வீதி மிகவும் உடைந்த நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(ii) இந்த வீதி நிர்மாணிக்கப்பட்டு காபட் இடப்பட்ட 7 கிலோமீற்றரில் ஓரங்களிலிருந்து 300 மில்லிமீற்றர் வரை 5 அளவுகளில் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் வீதியின் எல்லை வரை பூர்த்தி செய்யப்படாதிருந்த இடங்களும் அவதானிக்கப்பட்டன.

(iii) செயற்திட்டத்தில் கொங்கிரீட் வடிகாண் இடவேண்டிய அளவு 1.820 கிலோமீற்றராக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு வடிகாண் போடப்பட்டமையின் காரணமாக ABC படை கழன்று காபட் படை உடைந்து செல்லும் நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(iv) நிர்மாணிக்கப்பட்ட 7 கிலோமீற்றர் வீதிக்கு ஊடாக மதகு நிர்மாணிக்கப்பட வேண்டிய இடங்களில் மதகு நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக வீதியின் இரு பக்கங்களிலும் சில இடங்களில் நீர் தேங்கியிருந்தது.

**(இ) போகபீனுவல மஹவெல்ல லேல்கடை வரை 3.5 கிலோமீற்றருக்கு காபட் இடல்**

---

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 70,812,750 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்றின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் 2011 யூன் 20 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி வேலைகள் 06 மாதங்களில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையில் ரூபா 33,430,133 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2014 ஒக்தோபர் 09 ஆந் திகதி வரையிலும் வீதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த வீதிக்கு காபட் இடப்பட்டதன் பின்னர் ஓரங்களில் வீதியின் மேல் மட்டத்திலிருந்து மண் நிரப்பி தடிப்பமாக்குதல் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் வீதியின் மேற்பரப்பு மற்றும் ஓரங்களிற்கிடையே இடைவெளி 100 மில்லிமீற்றரையும் விட அதிக அளவினையுடைய இடமாக இருந்தது.

(ii) ஓரங்களை நிரப்புவதற்கு பயன்படுத்தப்பட்ட மண்ணில் நீர் உறிஞ்சப்பட்டமையின் காரணமாக சதுப்பு நிலைமைக்குள்ளாகி சேற்றுக் குழிகள் ஏற்பட்டிருந்ததுடன் ஓரங்கள் உரிய நியமத்தின் படி தரமான கிரவல் மண் இட்டு தடிப்பமாக்கப்படாமையின் காரணமாக 480, 1360, 2000 மற்றும் 2600 மீற்றரான இடங்களில் காபட் படை உடைந்திருந்தது.

(iii) 1490 மீற்றர் அளவான இடத்தில் காணப்பட்ட பழைய மதகின் மேல் போடப்பட்ட காபட் படை (வீதியின் மத்தியில்) வெடித்திருந்ததுடன் பழைய மதகு தூர்ந்து போகும் நிலைக்குள்ளாகியிருந்தது.

**(ஈ) பிட்டிவெல்ல ரணபனாதெனிய வீதியில் 6.5 கிலோமீற்றருக்கு காபட் இடும் செயற்திட்டம்**

---

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 145,435,380 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியில் 2011 யூலை 28 ஆந் திகதி மாவட்ட செயலாளரும் அரச பொறியியல் கூட்டுத்தாபனமும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தனர். 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் இதற்காக ரூபா 73,281,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2012 சனவரி 28 ஆந் திகதி அளவில் தொழிற்சாலையின்

வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 07 ஆந் திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் வீதியின் ஆரம்ப 110 கிலோமீற்றர் அளவான பகுதிக்கு காபட் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் படி பௌதீக செயல்முன்னேற்றம் 100 சதவீதமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் வீதியின் 08 இடங்களில் (மீற்றர் 2 முதல் 110 வரையான) காபட் இடப்பட்டிருக்கவில்லை. (Base Court இற்குரிய இடம் மற்றும் Culverts நிர்மாணிக்கப்பட வேண்டிய இடங்கள் உள்ளடங்கலாக)

(iii) காபட் இடப்பட்டிருக்காத மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் ABC படைகளும் கழன்று பாரியளவாள குழிகள் ஏற்பட்டிருந்தன.

(iv) வீதியின் இரு ஓரங்களிலும் 150 மீற்றர் முதல் 225 மீற்றர் வரையான அளவில் வீதி மட்டத்தைவிட தாழ்ந்த நிலையில் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகளவில் அவதானிக்கப்பட்டதுடன் ஓரங்களில் நிரப்பட்ட இடங்களில் பாரியளவில் குழிகள் ஏற்பட்டிருந்தது. இரு பக்கமும் நிரப்புவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மண் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) வீதியின் 4 கிலோமீற்றர் அளவில் முடிவடையும் இடத்தில் மதகொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டமையால் அதில் காபட் இடப்படாதிருந்த போதிலும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் மதகு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வீதியில் 3,955 மீற்றர் அளவில் முடிவடையும் இடத்தில் காணப்பட்ட Hume pipe Culverts இனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அதற்கு முன்னால் திட்டமிடப்பட்ட படி Culvert ஒன்று நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக வீதியில் நீர் வழிந்தோடுவது இடையூறாக இருந்தது.

(vii) வீதியை அமைக்கும் போது கொங்கிரீட் காண் போடவேண்டிய இடமான 1400 மீற்றர் முதல் 1600, 2300 மீற்றர் முதல் 2400, 2800 மீற்றர் மற்றும் 3300 மீற்றர் கொங்கிரீட் காண் அமைக்கப்படாமையினால் வீதிக்குப் பயன்படுத்தப்பட்ட ABC படையொன்று கழன்று காணப்பட்டது.

(viii) Dish Drain இடப்பட வேண்டிய 400 மீற்றர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த இடத்திற்காக Dish Drain இடப்படாமையின் காரணமாக ஓரங்கள் மிகவும் அதிகளவில் கழுவிச் செல்லப்பட்டிருந்தது.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

26101 ஆம் விட இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த வருடமொன்றிற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,631,547 ஆக இருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

மாவட்டச் செயலகத்திற்குரிய நிர்வாக உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ வீடு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முதல் வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக வீட்டு வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவின் படி துப்பாக்கி அனுமதிப்பதிரம் வருடந்தோறும் புதுபிப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அனுமதிப் பத்திரப் பெறுமதி ரூபா 12,700 ஆன 29 துப்பாக்கிகளுக்கான அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாது உரித்தை வைத்திருந்தனர்.

**3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**செயற்திட்ட அமுலாக்கலில் தாமதம்**

2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட தொலைக்கல்வி செயற்திட்டத்திற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,400,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட புரெஜெக்டர் இயந்திரம் கிடைப்பதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு**

**செயற்பாடற்ற வங்கிக் கணக்கு**

மாவட்ட செயலகத்தினால் பேணப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்குகள் 2006 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அதன் மீதி ரூபா 194,086 ஆக இருந்தது.

**3.7 நட்டம் மற்றும் இழப்பு**

மூன்று பிரதேச செயலகங்களுக்குரிய 3 வாகனங்கள் விபத்திற்குள்ளாகி 3 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் உரிய நட்டமான ரூபா 184,851 தொகையை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 68 | 64 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 39 | 22 | 17 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,622 | 1,571 | 51 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 175 | 173 | 03 | 01 |
| | மொத்தம் | 1,904 | 1,830 | 75 | 01 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் மாவட்ட செயலகத்தில் 02 வெற்றிடங்களையும் பிரதேச செயலகங்களில் 73 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மாவட்ட செயலகத்தில் ஆரம்ப நிலைக்குரிய ஊழியரொருவர் மிகையாக இருந்தும் அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.